10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 184 வெள்ளிக்கிழமை நவம்பர் 24 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## மாவீரருக்கு அஞ்சலிப்பு மாகாணசபை மறுப்பு



யாழ்ப்பாணம்,நவ.24
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் வேண்டாம் 06



## ரவிகரனுக்கு பாராட்டு மழை

யாழ்ப்பாணம், நவ.24
ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் வடக்கு மாகாண சபை 06

## தலை தப்பியது



கொழும்பு,நவ.24
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டிருந்த நிலையில், அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக கத்தலையிட்டு 06



## இன்னொரு 'ஆவா' சிக்கினார் நேற்று

யாழ்ப்பாணம், நவ.24
ஆவா குழுவின் முக்கிய நபர் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர். சின்னா என அழைக்கப்படும் ரவிகிருஸ்ணா (வயது 23) என்ற 06

# வதை முகாம்களை ஐ.நா. ஆராய வரும்



கொழும்பு,நவம்பர் 24
இலங்கையில் போர் முடிவுற்ற பின்னரும் தமிழ் இளைஞர்கள் படையினரால் மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக புகைப்பட ஆதாரங்கள் வெளியானதையடுத்து, குறித்த சித்திரவதைக் கூடங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து நேரடி விசாரணைகளில் இறங்கவுள்ளனர். 06

## மாணவர்களுக்கு டப் கணினிகளை இந்தியா வழங்கும்
### ரணிலிடம் மோடி உறுதி



புதுடில்லி, நவ.24
இலங்கையின் கல்வித் துறையில் டிஜிட்டல் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இலங்கைப் பிரதமர் ரணில் 06

## ஆவா கும்பலில் முஸ்லிம் இளைஞர்
### வலைவீசுகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் முஸ்லிம் இளைஞன் ஒருவர் தேடப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆவா குழுவுக்கும் அவருக்கும் தொடர்பு உள்ளதாக இரகசியத் தகவல்கள் தமக்கு கிடைத்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். "ஆவா குழுவின் முக்கிய 06

## சர்வேஸ்வரன் மீது என்ன நடவடிக்கை?
### முதல்வரிடம் விளக்கம் கேட்டு ஆளுநர் அனுப்பினார் கடிதம்



யாழ்ப்பாணம், நவ.24
"வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தமை மற்றும் அது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனி 06

## ஆயிரம் கிலோ கஞ்சா எரிப்பு





விரிவான செய்திக்கு 06



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனகபுரம் துயிலுமில்லத்துக்கு சிறிதரன் 40 இலட்சம் ரூபா நிதி

கிளிநொச்சி,நவ.24

கிளிநொச்சி, கனகபுரம் பிரதேசத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் சேதமடைந்துள்ளதால், இந்த முறை மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவும், புதிய மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்மாணிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் 40 இலட்சம் ரூபாவை வழங்குவதாக நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

“நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கான செயலகங்களின் கீழ் இந்த நிதியை வழங்க, கரைச்சி பிரதேச செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் என்பவற்றின் அனுமதியும் கிடைத்துள்ளது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால், அவர்களின் மயானத்தை நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டமை பிரச்சினைக்குரியது எனப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். கடந்த 2009ஆம் ஆண்டு கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 97 கல்லறைகள் இருந்தன. ஆரம்பத்தில் இருந்தவாறே துயிலும் இல்லம் நிர்மாணிக்கப்படும்” என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறினார்.

# இத்தாலிக் கப்பல் இலங்கை வருகை



கொழும்பு,நவ.24

இத்தாலிக்குச் சொந்தமான கொஸ்டா நிக்லெசிகா என்ற அதிநவீனப் பயணிகள் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அரசாங்கத்தின் சிறப்பான வெளிநாட்டுத் தொடர்புகளின் முடிவாக இந்தக் கப்பல் இலங்கைக்கு வருகைதந்துள்ளது. வரலாற்றில் முதல் முறையாக இந்தக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளது. 14 மாடிகளைக் கொண்ட இந்தக் கப்பலில் 1680 பயணிகள் பயணிப்பதற்கான வசதிகள் உள்ளன. அத்துடன் இந்தக் கப்பலில் 560 ஊழியர்கள் சேவை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

# அமைச்சர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை



கொழும்பு, நவ.24

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்களே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். சபாநாயகர் அலுவலகத்தில் வைத்தே அவர்கள் இதனை வழங்கி வைத்துள்ளனர். (அ)

# வவுனியாவுக்கு இன்று புதிய அரச அதிபர்

வவுனியாஇ நவ.24

வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக சோமரத்தின விதான பத்திரன இன்று வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளார்.

இதுவரை வவுனியா அரசாங்க அதிபராக இருந்த ரோகன புஸ்பகுமார நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்த சோமரத்தின விதான பத்திரன புதிய அரசாங்க அதிபராக பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தின் அரச அதிபராக தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் பெரும்பான்மையினத்தவரே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைக்குழந்தையைக் கைவிட்டோடிய தாய்

வவுனியா,நவ.24

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் பத்து மாதக் கைக்குழந்தையையும், கணவரையும் கைவிட்டு தலைமறைவாகியுள்ளார் இளம் குடும்பப் பெண்.

சௌந்தராஜன் துக்சிகா என்ற பெண்ணே இவ்வாறு கணவரையும், கைக்குழந்தையையும் தவிக்க விட்டுத் தலைமறைவாகியுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட குறித்த பெண் கண்டியைச் சேர்ந்த சௌந்தராஜன் என்ற நபரைக் காதலித்துத் திருமணம் செய்திருந்தார். குழந்தை பிறந்த பின் மகளைத் தேடி வவுனியா வந்த குறித்த பெண்ணின் தாயார், தனது மனைவியைத் தன்னிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்று விட்டதாக சௌந்தராஜன் தெரிவித்தார்.

தனது மனைவியான துக்சிகா கடந்த 11ஆம் திகதி முதல் தன்னையும், குழந்தையையும் தவிக்க விட்டுத் தனது தாயாருடன் சென்று விட்டதாகவும், தனது மனைவியைக் கண்டுபிடிக்க பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாகவும் குறிப்பிட்டார். பால்மணம் மாறாத குழந்தை தாய்க்காக ஏங்கி அழுவதாகவும், இதன் காரணமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊராகச் சென்று மனைவியைத் தேடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஈ)

# மட்டக்களப்புக்கு புதிய அரச அதிபர்



மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பு மாவட்டப் புதிய அரசாங்க அதிபராக மாணிக்கம் உதயகுமார் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளை நேற்று வியாழக்கிழமை பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த சாள்ஸ் பதவி உயர்வு பெற்று சுங்கத் திணைக்களப் பணிப்பாளராகச் சென்றுள்ளார். இந்த நிலையில் புதிய அரசாங்க அதிபராக மாணிக்கம் உதயகுமார் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். மட்டக்களப்புக்குப் புதிதாக அரச அதிபராக நியமனம் பெற்ற உதயகுமார், முன்னர் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும், மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராகவும், பின்னர் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டுமான சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமை யாற்றியவராவார். (ஈ)

# ‘சுப்பர் சிற்றி’; கட்டார் உறுதி

கொழும்பு,நவ.24

இலங்கையில் சகல வசதிகளுடன் கூடிய சிறப்பு நகரத்தை(சுப்பர் சிற்றி) அமைத்துக் கொடுப்பதாகக் கட்டார் அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார். தொலைபேசி மூலம் கட்டார் அரசாங்க அதிகாரிகள் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளதாகவும், அரசாங்கம் விரும்பும் ஓர் இடத்தில் இந்த நகரத்தை அமைக்க முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள் ளார். கட்டார் அரசாங்கத்தினால் முதல் முறையாக இலங்கைக்கே இவ்வாறான ஓர் நகரம் வழங்கப்படுவதாகவும், நகரத்தை அமைப்பதற்கு இடமொன்றை ஒதுக்கித் தருமாறும் கட்டார் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஈ)

# காயங்களுடன் சடலம் கிண்ணியாவில் மீட்பு

திருகோணமலை,நவ.24

திருகோணமலை - கிண்ணியா கங்கைப் பாலத்துக்கு அருகிலுள்ள வீடொன்றுக்கு முன்னால் இருந்து வெட்டுக் காயங்களுடன் சடலமொன்று நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திரசிறி (வயது -50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும், இவர் வீடொன்றில் தனிமையில் இருந்து குளிர்பானக் கடை நடத்தி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிண்ணியா பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சொகுசு ரயில் சேவை இலங்கையில் விரைவில்



கொழும்பு,நவ.24

கொழும்பில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல்களுக்கு நிரந்தரத் தீர்வாக சொகுசு ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

“பிரிட்டனால் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் செயற்படுத்தப்படும் பிரதான ரயில் சேவை இதுவாகவே இருக்கும். அரசாங்கம் மற்றும் தனியார் பிரிவின் தலையீட்டில் மேற்கொள்ளப்படும் சூழலுக்கு நெருக்கமான இந்தப் போக்குவரத்துச் சேவை நாட்டுக்குப் புதிய அனுபவமாக இருக்கும்.

2035 ஆம் ஆண்டு வரையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் முன்நடவடிக்கையாகக் கொழும்பு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இலகு ரயில் கட்டமைப்பு ஒன்று அவசியமாகும். அதற்காக 7 இடைவழிகளை அடையாளம் காண முடிந்துள்ளது. கடுவெல, மாலபே, பத்தரமுல்ல, பொரளை ஊடாகப் புறக்கோட்டை வரையிலும், அங்கிருந்து கொள்ளுப்பிட்டிய வரையிலும் இடைவழிகள் இரண்டுக்கு ஜப்பான் அரசாங்கத்துடன் இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன் முதற்கட்ட நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. கடுவலயில் இருந்து மாலபே, பத்தரமுல்ல ஊடாகக் கோட்டை வரை இலகு ரயில் கட்டமைப்புத் தொடர்பான இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது” எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli
வெள்ளி, 24 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# பட்டமரமும் கெட்டமனங்களும்

சில வாரங்களுக்கு முன்னர் கந்துவட்டிக் கொடுமையை எதிர்த்து, கேலிச்சித்திரம் வரைந்தமைக்காக கார்ட்டூனிஸ்ட் பாலா கைது செய்யப்பட்டிருந்தார். அதுவும் தன்னுடைய முகப்புத்தகத்திலேயே அவர் அதனைப் பகிர்ந்திருந்தார். வேறெந்த ஊடகங்களிலும் வெளிவரவில்லை. அப்படியிருந்தும் அதிகாரத்துக்கு தன்னைக் கேலிசெய்யும் அந்தக் கருத்தோவியம் சினத்தை மூட்டியதால், அவர் கைதானார். எனினும் கருத்துச் சுதந்திரத்தைக் கழுத்தறுக்கும் இந்தச் செயலைக் கண்டித்து அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும், பொதுமக்களும் போராடியதால் அவர் விடுவிக்கப்பட்டார்.

இப்போது இதே கதை இங்கும் அரங்கேறியிருக்கிறது. வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு ஏதோ அலுவலாகச் சென்ற இளைஞர் ஒருவரின் கண்ணில் நகை முரணான ஒரு காட்சி தென்பட்டுள்ளது. வெட்டியழித்துப் பட்டுப் போகச் செய்யப்பட்ட ஒரு மரமொன்றின் கீழே 'மரம் நடுகை மாதம்' என்ற, பதாகை கட்டப்பட்டிருந்தது. சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற அர்த்தத்தை தரக்கூடிய அந்தக் காட்சியை தன் கைபேசியில் படமெடுத்து அதனை பேஸ்புக்கில் பதிவேற்றினார். அதனைப் பார்த்த பலர் பகிரவும் செய்தார்கள்.

அவ்வளவுதான், பிரதேச செயலக அதிகாரிகளுக்கு மூக்கின் மேல் வந்ததே கோபம். அந்த இளைஞன் மீது பொலிஸில் முறைப்பாடு செய்யுமளவுக்கு அந்தக் கோபம் உச்சம் தொட்டிருந்தது. அந்த முறைப்பாடு கிடைத்ததும் குறித்த இளைஞனை அழைத்து பொலிஸ் விசாரித்திருக்கிறது. நேற்று நடந்த இந்த விசாரணை தனியே பதாகையைப் படம் எடுத்துப் பதிவேற்றியதோடு மட்டும் நிற்கவில்லை, அதையும் தாண்டி அந்தப் பகுதியில் உள்ள மாவீரர் துயிலுமில்லம் ஒன்றின் புனரமைப்புப் பற்றியும் நீண்டிருக்கிறது. குறித்த மாவீரர் துயிலுமில்லப் புனரமைப்பில் அந்த இளைஞனும் முக்கிய பங்காற்றியிருந்தான். ஆயினும் அது பொலிஸாருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. படமெடுத்து, தங்கள் பொட்டுக் கேடுகளை உலகறியச் செய்துவிட்டானே என்ற ஆத்திரத்தில், அந்த இளைஞன் முன்னின்று செய்த மாவீரர் துயிலுமில்லப் புனரமைப்பையும் பொலிஸிடம் போட்டுக் கொடுத்துள்ளனர் வவுனியா வடக்கு பிரதேசசெயலக அதிகாரிகள்.

இப்படி தங்களின் சீரழிவுகளை முக நாகரீகமாக வெளிப்படுத்தும் போது, அதனைச் சீர் செய்து இனிமேல் அவ்வாறான தவறுகள் வராதவாறு நடப்பதே நல்ல அதிகாரிகளுக்கு அழகு. அதைவிடுத்து, "நாங்கள் என்னவும் செய்வோம், அதைக் கேட்க எவருக்கும் உரிமையில்லை. கேட்டால் பொலிஸில் முறைப்பாடு செய்வோம்" என மிரட்டும் பாணியில் நடந்து கொள்வது எந்தவகையிலும் நியாயமில்லை. அத்தோடு கார்ட்டூனிஸ்ட் பாலாவுக்காக பொங்கிய, நம்மூர் இளைஞர்களும், சமூக வலைத்தளப் பதிவர்களும், ஊடகவியலாளர்களும் ஒரு சாதாரண இளைஞனின் கருத்து சுதந்திரத்தைக் காவு வாங்கும் வவுனியா வடக்கு பிரதேச செயலக அதிகாரிகளுக்கு எதிரான தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் இனிமேல் இதுபோன்ற தலைகுனிய வைக்கும் காரியங்கள் நடக்காமலிருக்கும்.

கருத்துச் சுதந்திரத்தையும், தனி மனித உரிமையையும் சவக்கிடங்கில் தள்ளிய வவுனியா வடக்கு பிரதேச செயலக அதிகாரிகளுக்கு 'எதிரொலியின்' வன்மையான கண்டனங்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவி



வடமராட்சி, நவ.24

முன்னாள் போராளியான, முல்லைத்தீவு, முள்ளியவளையைச் சேர்ந்த பி.சந்திரகுமார் என்பவருக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கம், சுயதொழிலுக்கான உதவிகளை நேற்று வழங்கியுள்ளது.

குறித்த முன்னாள் போராளி வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நெருக்கடிக்குள் இருந்ததால், அவர் சிறு வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கும் வகையில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை நெல்லியடி வர்த்தகர் சங்கத்தின் சார்பில் செயலாளர் சுரேரஞ்சனும், பொருளாளர் அருட்செல்வமும் வழங்கினர்.

இதன்போது தன் சொந்தச் செலவில் குறித்த பயனாளிக்கு இலத்திரனியல் தராசு ஒன்றினையும் சங்கப் பொருளாளர் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-11)

## நாடாளுமன்றில் அவசர கூட்டம்




கொழும்பு, நவ.24

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடும் சூழல் எழுந்துள்ளமை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் அவசர கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்புக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளதை அடுத்தே இந்தக் கூட்டத்துக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தினேஸ் குணவர்த்தன மற்றும் ஐதேக உறுப்பினர் ஹேசன் விதானகே ஆகியோர் வலியுறுத்தினர்.

அதற்கு அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, நீதிமன்ற உத்தரவை மீறவோ, மாற்றவோ முடியாது என்று கூறினார்.

இதன்போது சபாநாயகர் கரு ஜெயசூரிய, தேர்தலை தன்னால் நடத்த முடியாது என்றும், வெள்ளிக்கிழமை இந்த விவகாரம் குறித்து விவாதிக்க முடியும் என்றும் கூறினார். (அ)

## சிறுமியை வேட்டையாடிய பொலிஸ் அதிகாரி கைது




கொழும்பு,நவ.24

சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாகத் தங்காலை பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றிய உப-பொலிஸ் பரிசோதகர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

சிறுமியின் தாயாருடன் குறித்த உப -பொலிஸ் பரிசோதகர் தவறான தொடர்பை வைத்திருந்தார். தாயைச் சந்திக்க வீட்டிக்குச் சென்று வரும் சந்தர்ப்பத்திலேயே சிறுமியையும் சந்தேகநபர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சிறுமியின் பெற்றோருக்கு இடையிலான பிரச்சினை குறித்த முறைப்பாட்டை விசாரித்த நேரத்திலேயே, இந்தத் தகவல் வெளிச்சத்துக்கு வந்து, பொலிஸ் உத்தியோகத்தரின் கையில் விலங்கை மாட்டியுள்ளது. (அ)

# பந்தாடப்பட்ட ஓட்டோ



வடமராட்சி, நவ.24

நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோவை, எதிரே வந்த இராணுவ வாகனம் பந்தாடியது. இச்சம்பவம் கரணவாய் விழுந்தாலடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இதில் ஓட்டோ தடம் புரண்டது. எனினும் தெய்வாதீனமாக ஓட்டோச் சாரதி சிறுகாயங்களுடன் தப்பினார். (அ-11)

# முஸ்லிம்கள் மீது தாக்குதல்: பிரேரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ.24

காலி ஜிந்தொட்ட பகுதியில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்தும், அது தொடர்பில் நீதியான விசாரணையைக் கோரியும் சிறப்பு கண்டனப்பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் இன்று முன்மொழியப்பட்டது. எனினும் அவை உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக அந்தப் பிரேரணை அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடமாகாண சபையின் 110 ஆவது அமர்வு நேற்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது ஜிந்தொட்ட, வவுனியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீது அண்மையில் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை கண்டிக்கும் சிறப்புப் பிரேரணை ஒன்றை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் அவையில் முன்மொழிந்தார்.

ஆயினும் வவுனியாவில் இடம் பெற்ற சம்பவம் திட்மிட்ட ரீதியில் இடம் பெற்றிருக்க வாய்ப்பில்லை.

எனவே அதைத் தவிர்த்து விட்டு இந்தப் பிரேரணையை நிறைவேற்றுமாறு வவுனியா மாவட்ட உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில் இவ்வாறான பிரேரணைகள் மேலும் வன்முறைகளைத் தூண்டும் விதமாக அமைந்துவிடும் என்ற ரீதியில் எதிர்க் கட்சிதலைவர் சி.தவராசா உள்ளிட்ட ஏனைய சில உறுப்பினர்களும் கருத்துக்களை தெரிவித்தனர். இந்த விடயத்தில் அவசர முடிவுகள் எடுக்காமல் அடுத்த அமர்வுக்கு இதை ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழங்கிய ஆலோசனைக்கமைவாக இந்தவிடயம் அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

## யாழில் எகிறும் தேங்காய் விலை!

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ். குடாநாட்டில் தேங்காய்களின் விலை தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். யாழ். குடாநாட்டின் முக்கிய சந்தைகளில் ஒன்றாகக் கருதப்படும் திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் நேற்றைய நிலைவரப்படி பெரிய தேங்காய் ஒன்று 95 ரூபா முதல் 97 ரூபா வரையும், நடுத்தரத் தேங்காய் ஒன்று 80 ரூபா முதல் 85 ரூபா வரையும், சிறிய தேங்காயொன்று 40 ரூபா முதல் 60 ரூபா வரையும் தற்போது விற்பனையானது.

இதேவேளை-யாழ்.மாவட்டத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்களில் ஒருவருக்கு ஐந்து தேங்காய்கள் என்ற அடிப்படையில் தேங்காய்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ)

## இன்று நாளும் கோளும்

24.11.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 07 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| ஷஷ்டி மு.ப. 04.51 மணி வரை | உத்தராடம் மு.ப. 08.21 மணி வரை | மரணயோகம் |
| இராகுகாலம் 10.30 – 12.00 | சுபநேரம் 09.15 – 10.15 | எமகண்டம் 03.00 – 04.30 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இன்பம் | செலவு | தெளிவு | உதவி | ஆர்வம் | பயம் | சிக்கல் | கவனம் | பாசம் | நம்பிக்கை | நேர்மை | பிரயாணம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

வெள்ளி 24 நவம்பர் 2017



# சலுகைகளுக்காகவே ரவிகரன் தாவினார்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி சாட்டையடி

யாழ்ப்பாணம், நவ.24

“சலுகைகளுக்கு ஆசைப்பட்டே, பேரம் பேசலுக்குப் பணிந்து ரவிகரன் கட்சி தாவியுள்ளார். எத்தனையோ பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, அவற்றையெல்லாம் சமாளித்த ஈ.பி.ஆர்.எல்.எப் இது போன்ற சலசலப்புக்கு அஞ்சாது” என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் தமிழரசுக் கட்சியினுடனான கொள்கை முரண்பாட்டால், ஈ.பி.ஆர்.எல்.எப் ‘தமிழரசுக் கட்சியோடு இணைந்து அரசியல் செய்ய முடியாது’ என அறிவித்தது. இதனையடுத்து, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து சிலர் தமிழரசுக் கட்சிக்குத் தாவினர். இது குறித்தே சிவசக்தி ஆனந்தன் எம்.பி அறிக்கை மூலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வகுத்துக்கொண்ட கொள்கையிலிருந்து தமிழரசுக் கட்சி விலகிப் போவதால், அதனை ஈ.பி.ஆர்.எல்.எப் பலத்த விமர்சனங்களுக்கு உட்படுத்துகின்றது. இது தமிழரசுக் கட்சிக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் மீது கோபம் வருவதற்குக் காரணமாக இருக்கலாம்.

இதன் காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எப்பை முடக்கிவிட வேண்டும் அல்லது அழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி தமிழரசுக் கட்சியின்



உயர் மட்டத்தினர் இணைந்து வேலை செய்துவருகின்றனர். முக்கியமாக பல்வேறுபட்ட விதங்களில் எமது அங்கத்தவர்களுடன் பேரம் பேசப் படுவதாகவும் அது பணமாகவோ, எதிர்காலப் பதவிகளை இலக்கு வைத்து உத்தரவாதங்கள் வழங்கப் படுவதாகவும் அறிய முடிகிறது.

இந்த அடிப்படையில்தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனும் சில பேரங்களுக்கு உட்பட்டே கட்சி மாறியுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் வவுனியாவில் நடைபெற்ற எமது கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் அரசியல் சாசன விடயங்கள், தமிழரசுக் கட்சி அதனைக் கையாளும் முறைமை உள்ளிட்ட பல விடயங்கள் விவாதிக்கப்பட்டு தமிழரசுக் கட்சி பிழையான பாதையில் செல்கிறது என்பதை து.ரவிகரன் உள்ளிட்ட சமூகமளித்த சகல மத்திய குழு உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டார்கள். நிலைமை அவ்வாறிருக்க, தேசியத் தலைவர் காட்டிய வீட்டுச் சின்னத்தை விட்டு என்னால் வெளிவர முடியாது என்று கூறி கொள்கைகளை முற்றுமுழுதாகக் கைவிட்டுவிட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழரசுக் கட்சியுடன் இன்று அவர் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

ஆனால், கொள்கையை விட்டு விலகிச் செல்பவர்களை தேசியத் தலைவர் எப்பொழுதும் போராளியாக ஏற்றுக்கொண்டதில்லை. போராட்டம் முழுவீச்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்களும் எட்டி நின்றவர்களும் இன்றைய அரசியலில் தம்மைப் போராளிகளாகக் காட்டிக்கொள்வதையும், தலைவர்களின் பெயர்களைக் காட்டி தமது கதிரைகளைப் பலப்படுத்திக் கொள்வதையும் நோக்குகின்ற பொழுது எமது மக்கள் செய்த தியாகங்களைக் கொச்சைப்படுத்துவதற்காகவே இவர்கள் அரசியலுக்கு வந்திருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.” என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பஸ் மீது குண்டு வீச்சு

கொழும்பு, நவ.24

மொனராகலையிலிருந்து, கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பஸ் மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேலியகொட, எம்பிலப்பிட்டி பிரதான வீதியில் நடந்த இந்தக் குண்டுவீச்சில் பஸ் சாரதி காயமடைந்துள்ளார். காயமடைந்த சாரதி எம்பிலிப்பிட்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தனிப்பட்ட முறுகல் காரணமாக இந்தப் பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

## நீதிபதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, நவ.24

நீதிமன்ற சேவை அதிகாரிகள் 41 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்த இடமாற்றத்தின் கீழ் நீதிச் சேவைகள் ஆணைக்குழு மூலம் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள், மேலதிக நீதவான்கள் உள்ளிட்ட 41 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றங்கள் எதிர் வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் என நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இவ்வருடம் ஜனவரி மாதம் 70 இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)


# சிறுமியைத் துஷ்பிரயோகித்த வயோதிபருக்கு 1 வருடச்சிறை

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணத்தில் 9 வயதான சிறுமியை துஷ்பிரயோகம் செய்த வயோதிபர் ஒருவருக்கு 1 வருடக் கடூழிய சிறைத் தண்டனையும் 10ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்து யாழ். மேல் நீதிமன்றம் தீர்பளித்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு குறித்த சிறுமியை 65 வயதான வயோதிபர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கு தொடர்பான விசாரணைகளின்போது குறித்த துஷ்பிரயோகக் குற்றச்சாட்டை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து குறித்த வயோதிபருக்கு



1

ஒரு வருடக் கடூழியச்சிறைத் தண்டனையும், 10ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும், அதனைக் கட்டத்தவறின் ஆறு மாத கால கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (அ)

# படைவிட்டோடிகளை உடன் கைது செய்க!

## இராணுவத் தளபதி உத்தரவு

கொழும்பு,நவ.24

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய நபர்களைக் கைது செய்வதற்காக , இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில் தேடுதல் நடவடிக்கைகளை நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தேடுதல் நடவடிக்கை நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் சட்டரீதியான விலகிக் கொள்ள வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக்காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது. கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதியில் இருந்து அமுலில் இருந்த பொது மன்னிப்புக் காலத்தில் 11,232 பேர் இராணுவத்தில் இருந்து சட்டரீதியாக விலகிக்கொண்டுள்ளனர். இவர்களில் 15 அதிகாரிகளும் 9 கடேட் அதிகாரிகளும் அடங்குகின்றனர். இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மேலும் 26,000 பேரை கைது செய்ய இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## விரும்பினால் கேளுங்கோ. இல்லாட்டிப் போங்கோ.!

எங்கடை வம்சத்திலை இல்லாத பழக்கம், ஆக்களை ஏமாத்திறது. ஏமாத்தி, ஏமாத்திப் பிழைச்சு ருசி கண்ட வைக்கு சீற்றை விட்டிட்டுப் போக மனமில்லாமல் கிடக்கு. இப்ப தமிழற்றை பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு ஆரேன் அடிபடுகினமோ எண்டு பாருங்கோ? எல்லாரும் தங்கடை தங்கடை பிரச்சினையைத் தீர்க்கவும் தன்னைப் பெரியாளாக்கவும் தானே தள்ளுப்படுகினம்.

“தமிழ் தேசியம் பேசுறதுக்கு எதிராத் தான் சவால்விடுகிறேன்” – எண்டு சொல்லுறது ஆர்? அரசியலிலை அரிவரியிலை நாலைஞ்சு வருஷமா இருந்து கொண்டு இன்னும் அங்காலை போகாத சுமந்திரன். அந்த ஆளுக்கு தமிழ் தேசியம் பற்றி என்ன தெரியும் எண்டு கேக்கிறன்? அது சின்னப் பிள்ளைத்தனமா குழந்தை புசத்திது எண்டு பேசாமல் இருக்கத் தெரியாமல் தமிழ் தேசிய முன்னணியிலை இருக்கிற அந்தாளைப் போல இருக்கிற சுகாஸ், அது இன்னுமொண்டு “பகிரங்க விவாதத்துக்கு வா எண்டு கத்திது” – எண்டு நான் சொல்ல முதலி என்ன சொன்னவன் தெரியுமோ?

அண்ணை இரண்டும் உப்பிடி ஒரு பப்ளிக்கா வந்து சனத்துக்கு முன்னாலை கதைச்சாத்தான் இரண்டு பேற்றை பொட்டுக் கேடும் வெளியிலை வரும். – நீங்கள் அதைச் செய்யதனியள் எண்டு ஒராள் கத்த, மற்றாள் நீங்கள் இதைச் செய்தனியள் எண்டு கத்த – அப்பதான் அரசாங்கத்தோடை டின்னர் எடுத்த கதையும், மாவிட்டபுரத்திலை மாடி வீடு கட்டின கதையும் வெளியிலை வரும். உது சரியான சந்தர்பம் சனம் ஆக்களை விளங்கிக் கொள்ள. அண்ணை உதிலை ஆற்றையேன் ஒராளின்ரை ரெலிபோன் நம்பர் தெரிஞ்சா தா ரெலிபோன் அடிச்சுக் கதைச்சு இன்னும் அடிபடுங்கோ எண்டு சொல்லிக் கொஞ்சம் ஏத்தி விடலாம்– எண்டான்.

நான் சொன்னன் – முதலி இஞ்சை பார் இரண்டும் எங்கடை கோதாரியள். கதைக்கப் போறது எங்களைப் பற்றி. கதைக்க விட்டிட்டுப் பாத்துக் கொண்டு நிக்கேலுமே? நாய் சத்தியெடுக்கிற மாதிரி எடுக்குங்கள். எல்லாம் நாறும். விட்டிட்டுப் போ. வோட்டுப் போடேக்கை எல்லாத்தையும் பாப்பமெடா – எண்டன்..

உதை விடேலாது அண்ணை. சும்மா இருந்து சப்பிப்போட்டுத் தெண்டா எடுக்கிற விளையாட்டெல்லே உது. எங்கடை மாடி வீட்டு மாப்பிளை மாவை என்ன சொல்லுறார் எண்டால் – தமிழ் தேசியக் கூட்டமைப்பிலை இருந்து பிரிஞ்சு போறன் எண்டு சொன்ன சுரேஸின்ரை கருத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை எண்டு சொல்லுறார் எண்டான் முதலி.

பொதுச் சேவை எண்டும், பொது மக்கள் பிரச்சினை எண்டும் வரேக்கை ஆர் கேட்டாலும் பதில் சொல்லித்தான் ஆக வேணும். அப்பிடிப் பதில் சொல்ல மாட்டன் எண்டால் – டிப்பாட்மெண்டிலை களவெடுத்தவன் பைலை எடுத்து ஒழிக்கிற மாதிரி – ஏதோ உள்ளவிலை களவிருக்கிதெண்டுதானே விளக்கம். உவையின்ரை ஏற்றுக் கேடெல்லாம் சுரேஸுக்குத்தான் கனக்கத் தெரியுமாம்?

பப்ளிக்கிலை வா எண்டு கேட்டால் வரமாட்டன் எண்டு சொல்லுறதும், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டன் எண்ணிறதும் அரசியல் சாணக்கியம் எண்டே நினைக்கிறாய் அண்ணை. உது அடாவடித்தனம். “நாங்கள் இதைத் தான் செய்வம். விரும்பினால் ஏற்றுக் கொள்ளுங்கோ. இல்லாட்டிப் போங்கோ. ஆனால் ஒண்டும் மட்டும் சொல்லுறம் தேர்த்தல் கீர்த்தல் எண்டு வந்தால் வருவம். வோட்டை மட்டும் போடவேணும். இல்லாட்டித் தெரியும்....” எண்டது சண்டித்தனக் கதையெல்லே? எண்டது முதலி சொல்லுற ஞாயம்.

பொதுவா, ஒரு பொது வேலையிலை இருக்கிற ஆக்கள் அங்கை ஏதாவது பிழை நடந்தால் அப்ப சொல்லாமல் பேந்து பிரச்சினை எண்டு வரேக்கை எழுதி வைச்சு வாசிக்கிறது சரிவராது. ஏன் அப்ப சொல்லேல்லை எண்டு கேட்டால் “ஒற்றுமை குலைஞ்சு போம் எண்டு பேசாமல் இருந்தனாங்கள் எண்டு” ஒரு சாட்டு. பிழை வரேக்கையே அந்தச் சபையிலை சொல்லிப்போட வேணும். அதுக்கும் அவை திருந்தாட்டி பப்ளிக்கிட்டை சொல்வேணும். அதுக்கும் திருந்தாட்டி அதை விட்டிட்டு வெளியிலை வரவேணும். அதுதான் மனுசத் தன்மை. கடவுள் ஞாயம். அதை விட்டிட்டு அனுபவிக்கிறதையும் அனுபவிச்சுப் போட்டு வெளியிலை வந்து கொண்டு அராத்திற விளையாட்டுச் சரிவராது. சனத்தை வில்லங்கப்படுத்திற விளையாட்டேல்லே உது?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுமி கூட்டு வன்புணர்வு: கண்டித்து ஆர்ப்பாட்டம்

வவுனியா,நவ.24

வவுனியா - கணேசபுரத்தில் அண்மையில் 16 வயதுச் சிறுமி கூட்டு வன்புணர்வு செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், குறித்த பகுதியில் இடம்பெற்று வரும் சமூக விரோத இளைஞர்களின் அட்டகாசத்தைத் தடுக்கக் கோரியும் கண்டன ஊர்வலம் ஒன்று வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

கணேசபுரம் ஆலயம் முன்பாக ஆரம்பித்த இந்த ஊர்வலம் குழுமாட்டுச் சந்தி வீதி வழியாகச் சென்று நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தை வந்தடைந்தது. கடந்த 14ஆம் திகதி கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 16வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பாக 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இன்னும் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில்,இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், அந்தப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிகள், வீதிகளில் போதையில் கூடும் சமூக விரோத இளைஞர்களின் அட்டகாசத்தைத் தடுத்து நிறுத்தக் கோரியும் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.குமாரசிங்க ஊர்வலமாகச் சென்ற மக்களுடன் கலந்துரையாடியுனார்.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதி பெற்றுத் தரப்படும் எனவும், அந்தப் பகுதியில் இளைஞர்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார. (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



1992.11.24

யாழ்ப்பாணம், பலாலி வான்படைத் தளத்தின் கிழக்குப் பகுதி இராணுவ வேலி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது.

# ஆவா உளவாளிக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், நவ.24

ஆவா குழுவின் உளவாளி என கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டது.

ஆவா குழுவுடன் சேர்ந்து இயங்கியதோடு, அக்குழுவின் உளவாளியாகவும் செயற்பட்டார் என்ற சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரால் யாழ். நகரில் வைத்து குறித்த இளைஞர் கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளைவானில் கைது செய்யப்பட்டிருந்தார். அவரையே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# மஹிந்த தேசப்பிரியவுக்கு வந்தது வாய்க்கட்டு



கொழும்பு, நவ.24

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேல்முறையீட்டு நீதிமன்றம் வர்த்தமானி அறிவிப்புக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளதை அடுத்து, உள்ளூராட்சித் தேர்தல்கள் மேலும் தாமதமாகும் சூழல் எழுந்துள்ளது.

இதுகுறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது,"இப்போது எந்தக் கருத்தும் சொல்வதற்கில்லை.

தற்போதுள்ள நிலையில் என்னால் என்ன கருத்தைக் கூற முடியும்? புதிய சூழல்நிலை தொடர்பாக, வரும் 25ஆம் திகதி நடைபெறும் தேர்தல்கள் ஆணையத்தின் வாராந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும்" என்று தெரிவித்தார். (அ)

# பயங்கரப் புயல் இலங்கையைத் தாக்கும்



கொழும்பு, நவ.24

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகி வரும் புயலினால் இலங்கையும், தமிழ்நாட்டின் தெற்கு கரையோரப் பகுதிகளும் அடுத்தவாரம் கடுமையான பாதிப்புக்களைச் சந்திக்கக் கூடும் என்று அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது.

வார இறுதியில் இருந்து இந்தப் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் 28ஆம் திகதி வரை கடுமையான மழை இலங்கையிலும், , தென்னிந்தியாவின் கரையோரப் பகுதிகளிலும் பெய்யும் என்றும் அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது. (அ)

# 350 மில்லியன் கடனில் மன்னாரில் காற்றாலை



மன்னார், நவ.24

மன்னாரில் காற்றாலை மின்திட்டத்தை அமைக்கவும், 3400 கி.மீ நீளமான கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யவும், ஆசிய அபிவிருத்தி வங்கி 350 மில்லியன் டொலர் கடனுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இதுதொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும், நிதிய மைச்சுக்கும் இடையில் இரண்டு உடன்பாடுகள் நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டன.

340 கி.மீ நீளமான தேசிய நெடுஞ்சாலையை உள்ளடக்கியதாக, 3400 கி.மீ கிராமிய வீதிகளை தரமுயர்த்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 150 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்கவுள்ளது. வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் இந்த வீதி அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் மன்னாரில், காற்றாலை மின்திட்டத்தை அமைக்க 200 மில்லியன் டொலர் கடனுதவியையும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மன்னார் தீவில் 100 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலைப் பண்ணை அமைக்கப்படவுள்ளது. 256.7 மில்லியன் டொலர் செலவிலான இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, 200 மில்லியன் டொலரை கடனாக வழங்கவுள்ளது. எஞ்சிய 56.7 மில்லியன் டொலரை இலங்கை மின்சாரசபை முதலீடு செய்யும். (அ)



# "சம்பளத்தை உயர்த்து!" ஆசிரிய மாணவர் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.24

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்துக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் நேற்றுக் காலை நடத்தப்பட்டது. அடிப்படைச் சம்பளத்தில் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்க வேண்டும், ஆசிரிய உதவியாளர்களை தரம் 3-2 க்குள் உள்ளீர்க்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாடு முழுதும் உள்ள சகல ஆசிரியர் கலாசாலைகளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பட்ட மரப் படப்பதிவு; இளைஞன் விசாரணை

வவுனியா வடக்கு, பிரதேச செயலகத்தில் வெட்டப்பட்டு பட்ட மரத்தின் கீழ் கட்டப்பட்டிருந்த 'மரநடுகை மாதம்' என்ற பாதகையைப் படம் பிடித்துப் பதிவேற்றியவர் மீது பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தினராலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்துக்கு குறித்த இளைஞன் அழைக்கப்பட்டு நேற்று விசாரிக்கப்பட்டார். இன்று இரண்டாம் கட்ட விசாரணைக் காகவும் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இது கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

# ஒரு கொலை இரு தண்டனைகள்

யாழ்ப்பாணம், நவ.24

கொலைக் குற்றச்சாட்டு ஒன்றில், தமிழீழ நீதிமன்றினால் தண்டனை வழங்கப்பட்ட இருவருக்கு, அதே குற்றத்துக்காக யாழ்.மேல் நீதிமன்றத்தால் மீண்டும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது

வடமராட்சி, உடுப்பிட்டிப் பிரதேசத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி துரைராஜாசிங்கம் என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸாருக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் கண்டுபிடித்துக் கைது செய்து , வன்னிக்கு கொண்டு சென்று தமிழீழ நீதிமன்றில் முற்படுத்தினார்கள். இதன்போது குற்றவாளிகளில் ஒருவருக்கு மரணதண்டனையும், மற்றையவருக்கு ஆயுள் தண்டனையும் தமிழீழ நீதிமன்றால் விதிக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் , போர் தீவிரமடைந்ததைப் பயன்படுத்தி, புலிகளின் சிறையில் இருந்து ஆயுள்தண்டனைக் கைதி தப்பித்துள்ளார்.

எனினும் அவர் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு வந்த பின்னர், அதே கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் தமிழீழ நீதிமன்றால் ஆயுள் தண்டனை பெற்று மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவரை முதலாம் எதிரியாகவும், மரணதண்டனை விதிக்கப்பட்டவரின் கதி தெரியாத நிலையில் அவரை இரண்டாம் குற்றவாளியாகவும் பெயர் குறிப்பிட்டு வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் குறித்த படுகொலை, ஆத்திரத்தால் நிகழ்ந்த கைமோசக் குற்றம் எனக் கருதி முதலாம் குற்றவாளிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, 2 வருடக் கடூழியச் சிறையும், இரண்டாம் குற்றவாளிக்கு 7 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையையும், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் விதித்தார்.இரண்டாம் குற்றவாளி இல்லாத நிலையிலேயே குறித்த வழக்கு நடைபெற்றதாலும், அவருக்கு மரண தண்டனை புலிகளால் நிறைவேற்றப்பட்டதை உறுதிப்படுத்த முடியாததாலும், அவரை எங்கு கண்டாலும் உடன் கைது செய்யும் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. (அ)

# மாவீரரை அரசியல் கலப்பின்றி நினைவேந்த மாவை அழைப்பு

எந்தவிதமான அரசியல் கலப்பும் இன்றி அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து மாவீரர் நாளை புனித தினமாக அனுஷ்டிக்க முன்வர வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாட்டீன் வீதியில் அமைந்துள் இலங்கைத்தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை தமிழ் இனத்துக்காக ஆகுதி ஆக்கியவர்களின் நினைவு நாளாக மாவீரர் நாள் மதிக்கப்படுகிறது. விடுதலைக்காக போராடிய இனத்தின் சார்பில் தமிழ் மக்கள் ஆகிய நாம் அனைவரும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது வரலாற்று நிகழ்வு ஆகும். எனவே ஒவ்வொரு முறையும் துயிலும் இல்லங்கள், நினைவிடங்கள், அலுவலகங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வந்துள்ளோம். ஆனால் அண்மைக் காலமாக இந்த நிகழ்வில் அரசியல் ரீதியாக தலைவீடுகளும் குழப்பங்களும் ஏற்பட்டு வருவது மிகவும் துக்ககரமான செயற்பாடாக உள்ளது. பொதுமக்கள் இது தொடர்பில் மன வேதனை அடைகிறார்கள். மாவீரர்களின் தியாகத்தை மதிப்பதாக இருந்தால் எந்தவிதமான அரசியல் கலப்பும் இன்றி அதற்குள் அரசியலுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மாவீரர்களின் உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவர்கள் தலைமையில் நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார் மாவை.சேனாதிராஜா. (அ)

## தொடர்ச்சிகள்

### இன்னொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரே சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

"யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்புண்டு. ஆவா குழுவில் முக்கிய அங்கம் வகித்து வந்தவர்" என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

### சர்வேஸ்வரன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் கேட்டு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே.

"இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைவாகச் செயற்படுவேன் எனச் சத்தியம் செய்தே மாகாண சபை உறுப்பினராகவும் அமைச்சராகவும் சர்வேஸ்வரன் பதவி ஏற்றார். எனினும் அதனை மீறும் வகையில் தேசிய கொடியை ஏற்ற அவர் மறுத்துள்ளார். அத்துடன் அது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கும் கருத்துத் தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சரின் இந்தச் செயற்பாடு தொடர்பில் வெளியாகிய செய்திகள், அவரின் குரல்கள் உள்ளிட்ட ஆவணங்கள் இத்துடன் அனுப்பிவைக்கின்றேன்.

உங்களாலேயே அவர் மாகாண அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அந்தவகையில் கல்வி அமைச்சர் மீது உரிய நடவடிக்கை எடுக்க தங்களிடம் விளக்கம் கோரப்படுகிறது" என அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (அ)

### மாவீரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானம் மறுப்பு வெளியிட்டதால், மாவீரர்களை மாகாணசபையில் நினைவேந்தும் முயற்சி கைவிடப்பட்டது.

வடமாகாணசபையின் 110ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்று இடம் பெற்றது. இதன்போது, சபையை ஒத்திவைக்க முற்பட்டவேளை வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட், மாவீரர் தினத்தை முன்னிட்டு இந்த அமர்வில் அஞ்சலி நிகழ்வு ஒன்றை நடத்துவதற்கு அவைத்தலைவரிடம் அனுமதி கோரினார்.

எனினும், " மாவீரர் தினத்துக்கென பிரத்தியேகமாக அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையால், இந்த அமர்வில் மாவீரர் தின அஞ்சலி நிகழ்வுகள் வேண்டாம்" என அவைத்தலைவர் சிரித்தவாறு மறுத்தார். இதனால் அஞ்சலிப்பு நிகழ்வு கைவிடப்பட்டது. (அ)

### தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்தினர்.

பொதுப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தனது பெற்றோருக்குத் தனிப்பட்ட ரீதியிலான நினைவிடத்தை நிர்மாணித்தமை தொடர்பில் கோத்தபாயவைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு .சட்டமா அதிபர் வழங்கிய உத்தரவை ராஜபக்ச ஆதரவாளர்கள் வெளிப்படுத்தியதாலேயே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட்டம் ஒன்றில் இன்று அல்லது நாளை கோத்தபாய ராஜபக்ச கைதுசெய்யப்படலாம் எனக் கூறியிருந்தார்.

இதனை அறிந்துக்கொண்ட இத்தேபானே தம்மலங்கார தேரர் மற்றும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் ஆகியோர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து, கோத்தபாயவைக் கைது செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர். இதனையடுத்தே உடனடியாகப் பொலிஸ் மா அதிபரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, கோத்தபாயவைக் கைது செய்ய வேண்டாம் எனக் கூறியுள்ளார். இதனையடுத்து ராஜபக்ச குடும்பம் மிகுந்த மகிழ்ச்சியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

### மாணவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

ஹைதராபாத்திலுள்ள இந்தியப் பிரதமரின் இல்லத்தில் மோடியை நேற்றுச் சந்தித்தார் ரணில் விக்கிரமசிங்க.

"இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்வித் துறையில் மேற்கொள்ளவிருக்கும் டிஜிட்டல் மறுசீரமைப்புக்களுக்காக இந்தியா முழுமையான ஆதரவை வழங்கும். க.பொ.த. சாதாரண வர்களுக்கும் டப் கணனியை வழங்கும் முன்னோடி வேலைத்திட்டத்தை அமுல்படுத்தவும் இதற்குத் தேவையான தமிழ், சிங்கள மொழிகளிலான மென்பொருட்களை உருவாக்கவும் இந்தியா உதவும் என்றும் இந்திய பிரதமர் மோடி ரணிலிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக முன்னெடுத்துச் செல்லவும், சுதந்திரமான முறையில் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்வது குறித்தும் இருவரும் ஆராய்ந்தனர். இதன்போது, இலங்கை - இந்தியக் கூட்டுச் செயற்றிட்டத்தைத் துரிதமாக நடைமுறைக்குக் கொண்டுவரத் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நேற்றுக் காலை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்த 5 ஆவது உலக இணைய வெளி கருத்தரங்கிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

### ஆவா கும்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்கள் பலர் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தற்போது ஆவா குழுவின் முக்கிய செயற்பாட்டாளராக 22 வயதுடைய இக்ரம் எனும் முஸ்லிம் நபர் செயற்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்தன. அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

ஆவா குழுவுக்கு தகவல்களை வழங்கும் உளவாளியாக செயற்பட்டவர் எனும் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு கைது செய்யப்பட்ட கஜபாலசிங்கம் நிதர்சன் எனும் இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ,ஆவா குழு பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. அவை தொடர்பில் நாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்" எனக் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

### ஆயிரம் கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் பிடிபட்ட சுமார் 10 கோடி பெறுமதியான ஆயிரம் கிலோ கஞ்சா தீமூட்டி நேற்று எரிக்கப்பட்டது.

வழக்குகள் நிறைவடைந்து சான்றுப் பொருள்களாகக் காணப்பட்ட கஞ்சாவே , யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் ஆகியோர் முன்னிலையில் அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அருகே உள்ள பயன்பாடற்ற அரச காணியிலேயே இந்தக் கஞ்சா எரிக்கப்பட்டது. குறித்த ஆயிரம் கிலோ கஞ்சாவை முழுமையாக எரிக்க, 40 லீற்றர் மண் எண்ணெய் ஊற்றப்பட்டதுடன், 10 ரயர்களும் போடப்பட்டன. அவை முழுமையாக எரிந்து முடிய 4 மணித்தியாலங்கள் எடுத்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அண்மையில் அசோசியேட் பிரஸ் எனும் செய்தி நிறுவனமே இந்தச் சித்திரவதைக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது. பாலியல் ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் புகைப்பட, வீடியோ ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்ட இந்தக் குற்றச் சாட்டை இலங்கை மறுத்திருந்தது. எனினும் இது குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச மட்டத்தில் பல நாடுகளும் கருத்து வெளியிட்டிருந்தன.

இந்த நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மை பற்றியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சித்திரவதைக் கூடங்கள் பற்றியும் இலங்கைக்குச் சென்று நேரடி விசாரணைகளை முன்னெடுக்க ஐ.நா முடிவு செய்துள்ளது. இதற்கமைய ஐ.நாவின் விசேட அதிகாரிகள் டிசெம்பர் 5 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### ரவிகரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் து.ரவிகரன் நேற்றைய மாகாண சபை அமர்வில் நிறமுடிமையில் நனைந்தார். தமிழரசுக் கட்சி உறுப்பினர்களான குருகுலராசா, சத்தியலிங்கம், பசுபதிப்பிள்ளை, புளொட் உறுப்பினர் லிங்கநாதன் உள்ளிட்டோர் ரவிகரனுக்கு கைலாகு கொடுத்துப் பாராட்டுத் தெரிவித்தனர். 'மிகச் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்துள்ளீர்கள்" எனவும் அவர்கள் ரவிகரனுக்குக் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் கோபுர வழக்கு முடிவு 625 கோடி ரூபா இழப்பீடு

நியூயோர்க்,நவ.24
அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கட்டட உரிமையாளருக்கு 625 கோடி ரூபா இழப்பீடு வழங்க விமான நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையம் அமைந்திருந்த இரட்டைக் கோபுரத்தின் மீது, கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அல்-கெய்டா தீவிரவாதிகள், பயணிகள் விமானங்களைக் கடத்தி வந்து மோதித் தாக்குதல் நடத்தினர். இதில், 2,750 பேர் உயிரிழந்ததோடு, கட்டடம் தரை மட்டமானது. அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும் மற்றொரு விமானத்தை மோதித் தாக்குதல் நடத்தினர். மொத்தமாக இந்தத் தாக்குதலில் 3,000 பேர் உயிரிழந்தனர்.
தாக்குதலுக்கு உள்ளான இரட்டைக் கோபுரம், நியூயோர்க் மற்றும் நியூஜெர்ஸி துறைமுகக் கழகத்துக்குச் சொந்தமானது. சம்பவம் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே அந்தக் கட்டடத்தை சில்லவர்ஸ்டீன் என்பவர் 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்திருந்தார். அந்தக் கட்டடத்துக்கு அவர் காப்புறுதி செய்திருந்த நிலையில், தாக்குதலுக்குப் பின் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து 30,000 கோடி ரூபாவை இழப்பீடாகப் பெற்றார். எனினும், தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட விமான நிறுவங்களான அமெரிக்க ஏர்லைன்ஸ் மற்றும் யுனைடெட் ஏர்லைன்ஸ் ஆகியவற்றின் மீதும் சில்லவர்ஸ்டீன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு, நீதிமன்றங்களில் 17 ஆண்டுகளாக நடந்து வந்தது. இந்த நிலையில், 625 கோடி ரூபா இழப்பீடு வழங்க விமான நிறுவனங்களும், சில்லவர்ஸ்டீனும் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. (இ)

# 'பமா பூம்' மர்மம் என்ன?

நியூயோர்க்,நவ.24
அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் சமீபத்தில் மர்மமான வெடிச்சத்தம் போன்ற ஒலி பெரியளவில் கேட்டது, இது இங்கு மட்டுமல்ல, இதே போன்ற சத்தம் இந்த ஆண்டில் உலகின் 64 இடங்களில் கேட்டுள்ளது. மெக்ஸிக்கன் மாகாணம், பின்லாந்தின் லப்லாந்து பகுதி, பிரிட்டனின் வேல்ஸில் உள்ள ஸ்வன்சீ நகரம், யார்க் ஷயர் கவுண்டி போன்ற முக்கிய பகுதிகளும் இதில் அடக்கமாகும்.
இந்தப் பயங்கரச் சத்தத்துக்கு 'பமா பூம்' எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இது எதனால் ஏற்படுகிறது என்பது குறித்துப் பல்வேறு விதமான விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. பிரித்தானியாவின் பிர்மிங்காம் வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கையில், ராடர் அல்லது செயற்கைக்கோள் மீது பெரிய தீ அல்லது புகைகள் ஏற்படுவதைக் குறிக்கும் அல்லது நிலநடுக்கத்துக்கான அறிகுறியும் இல்லை எனத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பலர் பல விதமான காரணங்களைக் கூறினாலும்,உண்மையான காரணம் எதுவெனத் தெரியவில்லை.(இ)

# ஈ.பி.எஸ்- ஓ.பி.எஸ் அணிக்கே இரட்டை இலை

## தினகரனுக்கு அடுத்த இடி



சென்னை,நவ.24
இந்தியாவின் அ.தி.மு.க-வின் இரட்டை இலைச் சின்னம், கொடி என்பன எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்ச் செல்வம் அடங்கிய குழுவினருக்கே சொந்தம் என்று தேர்தல் ஆணையம் நேற்று வியாழக்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்தது.
அ.தி.மு.க பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர், கட்சியின் தலைமைக்கு எதிராக ஓ.பன்னீர்ச்செல்வம் குரல் எழுப்பினார். இந்த விவகாரத்தைத் தொடர்ந்து, ஓ.பன்னீர்ச்செல்வம் தரப்பில் தேர்தல் ஆணையத்தில் முறையிட, கட்சியின் அதிகாரபூர்வச் சின்னமான 'இரட்டை இலை' முடக்கப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக, தலைமைத் தேர்தல் ஆணையத்தில் நடந்த விசாரணையில் எடப்பாடி பழனிசாமி - ஓ.பன்னீர்செல்வம் மற்றும் சசிகலா - தினகரன் ஆகிய இருதரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில், இதுதொடர்பான தீர்ப்பைத் தேர்தல் ஆணையம் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தது.இந்த நிலையில், இரட்டை இலைச் சின்னம் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு ஒதுக்கப்படுவதாகத் தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்துள்ளது.தேர்தல் ஆணைய உத்தரவையடுத்து அ.தி.மு.க-வின் அதிகாரபூர்வ சின்னமான இரட்டை இலைச் சின்னம் மற்றும் கட்சிக் கொடியை எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் அடங்கிய ஒருங்கிணைந்த அ.தி.மு.க-வினர் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவிப்பை அடுத்து அதிமுகவினர் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (இ)



# துருக்கியில் நிலநடுக்கம்

அங்காரா,நவ.24
துருக்கி நாட்டின் தென் மேற்குப் பகுதியில் ரிக்டரில் 5 புள்ளியளவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.முகலா மாகாணத்தில் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஏஜியன் கடலில் சுமார் 31 கிலோமீற்றர் தூரத்தில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டதாகப் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
இரவு நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் ஒன்று திரண்டனர். சில கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இடிந்து விழுந்த கட்டடங்களில் சிக்கியவர்களை மீட்பதற்கு தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் விரைந்து சென்றனர். அருகில் உள்ள நகரங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. (இ)

# நமீதாவுக்கு கெட்டிமேளம்

திருப்பதி,நவ.24
பிரபல நடிகை நமீதாவுக்கு இன்று வெள்ளிக்கிழமை திருப்பதியில் திருமணம் நடைபெறுகிறது. ஹிந்தி நடிகரும், தயாரிப்பாளருமான மல்லிரெட்டி வீரேந்திர சவுத்ரி என்பவருக்கும், நடிகை நமீதாவுக்கும் இன்று அதிகாலை 5 மணிக்குத் திருப்பதியில் உள்ள இஸ்கான் கோவிலில் திருமணம் இனிதே நிறைவேறியது. திருப்பதியில் நடிகை நமீதாவின் திருமண நிச்சயதார்த்தம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. திருமணத்துக்காக இருவரும், நேற்று மன்தினம் மாலை ஹைதராபாத்தில் இருந்து விமானத்தில் புறப்பட்டு ரேணிகுண்டாவுக்கும், அங்கிருந்து கார் மூலம் திருப்பதிக்கும் வந்து சேர்ந்தனர். (இ)



# நீர்மூழ்கி மீட்பு



ஆர்ஜென்ரீனா,நவ.24
44 வீரர்களுடன் மாயமான ஆர்ஜென்ரீனா நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்கக் கடற்படை கண்டுபிடித்துள்ளதையடுத்து அவர்களை மீட்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.
கடந்த திங்களன்று 44 வீரர்களுடன் மாயமான அர்ஜென்ரீனா கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்கக் கடற்படை கண்டுபிடித்துள்ளமையைத் தொடந்து அதனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு ஒக்சிஜன் தட்டுப்பாடு எழுந்துள்ளதால் அதை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கக் கடற்படையினருக்கு மாயமான நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அதிர்வலைகள் வெளியாவது போன்ற அறிகுறிகள் கிடைக்கப்பெற்றமையைத் தொடந்து, அதிர்வலைகள் வெளியான பகுதியில் வெப்பத்தின் வீச்சம் பதிவாகியுள்ளது. இது கடலுக்கடியில் 230 அடி ஆழத்தில் இருந்து வெளிப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் ஆர்ஜென்ரீனா கடற்பகுதியில் இருந்து சுமார் 185 மைல்கள் தொலைவில் இந்த அதிர்வலைகள் வெளிப்பட்டுள்ளமையால் மாயமான நீர்மூழ்கிக் கப்பலை மீட்பது உறுதியாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். அமெரிக்கக் கடற்படையின் இந்தப் புதிய தகவல், ஆர்ஜென்ரீனா அரசுக்கும் கப்பலில் மாயமானவர்களின் குடும்பத்துக்கும் பெரும் ஆறுதலாக அமைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# சிரியாவில் போர் ஓய்வு

சிரியா,நவ.24
சிரியாவில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கான புதிய திட்டம் ஒன்றை ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெளிப்படுத்தியுள்ளார். இதற்கு ஈரான் மற்றும் துருக்கியின் ஆதரவும் கிடைக்கப் பெற்றுள்ளது. மூன்று நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில், சிரியாவின் அரச மற்றும் எதிரணிகள், நிலையான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.குறித்த திட்ட அமுலாக்கத்துக்கான திகதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.இதற்கான பேச்சுவார்த்தை கோச்சியில் உள்ள ரஷ்யாவின் விடுதியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# பெண்களுக்கு ஆதரவாக களமிறங்கும் ஷாருக்கான்

பெண்களுக்கு எதிரான வன்முறை மோசமான செயல் என்று நடிகர் ஷாருக்கான் கூறியுள்ளார். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்,மும்பையில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில்,நடிகர் ஷாருக்கான் கலந்துகொண்ட போது,"இன்றைய நாட்களில் மிகவும் மோசமான செயல் என்னவென்றால், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தான். பெண்கள் விஷயத்தில் உணர்வுபூர்வமாகவும், மரியாதையுடனும் நாங்கள் இருப்பதால், எங்களை சிலர் கேலி செய்கிறார்கள். பெண்கள் ஆண்களை விட மேலானவர்கள் என்றும், அவர்களைப் பார்த்து நாங்கள் அஞ்சுகிறோம் என்றும் இங்கு கூடியிருக்கும் அனைவரும் கருதுகிறார்கள். பெண்களைப் பார்த்துக் குறிப்பாக எங்கள் மகள், சகோதரி, தாய், மனைவி மற்றும் தோழிகளை பார்த்து பயப்படுவதில் வெட்கப்பட ஏதுமில்லை என்று நான் கருதுகிறேன்" எனக் கூறினார்.(இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# பயிற்சிக்கு நேரமில்லை

புதுடில்லி, நவ.24

தென்னாபிரிக்க ஆடுகளங்களில் பவுன்ஸர் பந்துகளை எப்படி எதிர்கொள்வதென்று பயிற்சியெடுக்கப் போதிய நேரமில்லை என இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான தொடரில் விளையாடி வரும் இந்திய அணி, டிசம்பர் 27ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறது. அங்கு, 3 டெஸ்ட், 6 ஒரு நாள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்த நிலையில், “இலங்கைக்கு எதிரான போட்டித் தொடர் முடிந்த உடனேயே தென்னாபிரிக்காவுக்கு இந்திய அணி செல்ல உள்ளது.

தென்னாபிரிக்க ஆடுகளங்களில் பந்துகள் அதிக அளவில் மேலெழும்பும். ஆனால், அத்தகைய பந்துவீச்சுகளை எதிர்கொள்ளும் பயிற்சிக்கு எங்களுக்கு போதுமான நேரம் கிடைக்காது. ஏனெனில், இலங்கைத் தொடர் முடிந்தவுடன் எங்களுக்கு இரண்டு நாட்கள் மட்டுமே இடைவெளி உள்ளது.” என கோஹ்லி தெரிவித்துள்ளார்.(அ)

# ஆசிரியர் தின உதைபந்து கரவெட்டி சம்பியன்

கரணவாய், நவ.24

வடமராட்சி கல்வி வலயத்தினால் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, வடமராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி சம்பியனானது.

இதன் இறுதியாட்டம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணியை எதிர்த்து பருத்தித்துறை கோட்ட ஆசிரியர் அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி வீரர் அரவிந்தன் ஒரு கோலைப் போட, கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர் அணி வீரர் பிரசாத் ஒரு கோலைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையைச் சமநிலைப்படுத்தினார். ஆனால் அதன் பின்னர் அதிரடியாக கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி வீரர்களான கருணானந்தன், அரவிந்தன் ஆகியோர் கோல்களைப் போட ஆட்ட நேர முடிவில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் சம்பியனாகியது. (அ-55-66)




# ரொனால்டோ சாதனை

போர்த்துக்கல், நவ.24

சம்பியன்ஸ் லீக் உதைபந்துத் தொடரில் ஒரு பருவ காலத்தில், அதிக கோல்கள் அடித்தவர் என்ற சாதனையை போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்துள்ளார்.

ரியல் மாட்ரிட் அணியில் விளையாடி வரும் ரொனால்டோ, சைப்ரஸ் நாட்டின் அபோயல் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டு கோல்கள் அடித்ததின் மூலம், இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

2017ஆம் ஆண்டில் மட்டும் ரொனால்டோ 18 கோல்கள் அடித்துள்ளார். மேலும், அதிக கோல்கள் அடித்தவர்களின் பட்டியலில் முதலிடமும் பிடித்துள்ளார். இந்நிலையில், ரியல் மாட்ரிட் 6-0 என்ற கோல் கணக்கில் அபோயல் அணியை வென்றதன் மூலம், காலிறுதிக்கு முந்தைய சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (அ)

# இங்கிலாந்து பலமான நிலை

பிரிஸ்பேன், நவ.24

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து பலமான நிலையில் உள்ளது. இந்தப் போட்டி பிரிஸ்பேனில் நேற்றுத் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அலஸ்டைர் குக், ஸ்டோன்மேன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அலஸ்டைர் குக், ஸ்டார்கின் பந்தில் ஆட்டமிழந்தார். அதனையடுத்து இணைந்த ஸ்டோன்மனும், வின்ஸூம் ஆஸ்திரேலியப் பந்துவீச்சைச் சிதறடித்து இருவரும் அரைச்சதம் கடந்தனர். எனினும் பின்னர் ஸ்டோன்மேன் 53 ஓட்டங்களுடனும், வின்ஸ் 83 ஓட்டங்களுடனும் வெளியேற்றப்பட்டனர். அதன் பின் களம் புகுந்த ஜோ ரூட்டும் நிலைக்கவில்லை. 15 ஓட்டங்களே அவர் எடுத்தார். ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி, 4 விக்கெட் இழப்புக்கு 196 ஓட்டங்களை எடுத்திருந்தது. களத்தில் மலன் 28 ஓட்டங்களுடனும், மொய்ன் அலி 13 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (அ)



# மரண அறிவித்தல்

## திருமதி பாரதி மாலசுதன் (பரா)

(ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)



வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாரதி மாலசுதன் (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) நேற்று வியாழக்கிழமை (23.11.2017) இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், சிவபாலன்–புஸ்பமாலா தம்பதியரின் மருமகளும், மாலசுதனின் (லண்டன்) பாச மனைவியும், சுருதிகா (மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி), சுருஜன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரும் அன்புத் தாயாரும், ரேவதி( லண்டன்), முகுந்தன் (அதிபர், யா/சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலை), முகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருகரன்(லண்டன்), அருந்ததி (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), கஜேந்தினி(லண்டன்), ஜனகன் (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்), பாலசுவர்ணா (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை ( 26.11.2017) காலை 8 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு றோட், வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனைகளுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 24.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.